# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC

முயற்சி! பயிற்சி !! வெற்றி!!!



# பெரியார் பயிற்சி பட்டறை



மணிவிழுந்தான் வடக்கு, ஆத்தூர் வட்டம்

சேலம் மாவட்டம்–636 112.

தொடர்புக்கு – 8072152951

**பாடம் :** வரலாறு (தேசியம்: காந்திய காலகட்டம் )

**நாள் :** 24.05.2020

**மொத்த வினாக்கள்–100** **தேர்வு –09**

**( இவ்வினாக்ளுக்கான விடைகள் அனைத்தும் Periyar Payirchi Pattarai You Tube channel இல் பதிவிடப்படும். மேலும் Description Box இல் இவ்வினாத்தாள் மற்றும் விடையுடன் கூடிய பிரதியை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் )**

முந்தைய தேர்வுகளின் வினா மற்றும் விடைகளை பெற இங்கே https://www.youtube.com/watch?v=4duApSnvEx8&t=48s கிளிக் செய்து Subscribe செய்து கொள்ளவும்.

1. கீழ்கண்ட கூற்றுகளில் பொருந்தாதது

   1. மகாத்மா காந்தி, தென்னாப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் சமூக உரிமைகளுக்காக சுமார் 20 ஆண்டுகள் போராடினார்.

   2. 1915 ஜனவரி 09 அன்று காந்தியடிகள் இந்தியாவிற்கு வந்தார்.

   3. சத்தியாகிரகம் என்ற புதிய போராட்ட வழிமுறையை அவர் இந்தியாவில் அறிமுகப்படுத்தினார்.

   4. மக்கள் கூட்டத்தைக் கூட்டவும் ஆங்கிலேய ஆட்சிக்கு அழுத்தம் கொடுக்கவும் காந்தி வன்முறையல்லாத வழிகளைப் பின்பற்றினார்.

   அ) அனைத்தும் சரி ஆ) 2 மட்டும் தவறு இ) 3 மட்டும் தவறு ஈ) 2 மற்றும் 3 தவறு

2. குஜராத்தின் போர்பந்தரில் மகாத்மாக காந்தியடிகள் பிறந்த ஆண்டு

   அ) 1879 அக்டோபர் 2 ஆ) 1869 அக்டோபர் 2 இ) 1869 அக்டோபர் 12 ஈ) 1859 அக்டோபர் 2

3. கீழ் கண்ட கூற்றுகளில் பொருந்தாதது

   1. காந்தியின் இயற்பெயர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

2. காந்தியின் தந்தையார் காபா காந்தி, போர்பாந்தரின் திவானாகவும் பின்னர் ராஜ்கோட்டின் திவானாகவும் பொறுப்பு வகித்தார்.

3. காந்தியின் தாயார் தீவிர சைவ பக்தை ஆவார்.

4. சட்டம் படிப்பதற்காக காந்தியடிகள் 1889 ஆம் ஆண்டு இங்கிலாந்திற்கு கடல்பயணம் மேற்கொண்டார்.

அ) அனைத்தும் சரி ஆ) 4 மட்டும் தவறு இ) 3 மட்டும் தவறு ஈ) 3,4 தவறு

4. காந்தியடிகள் சட்டப்படிப்பை முடித்துவிட்டு பிரிட்டிஷாரின் நீதி மற்றும் நியாய முறையில் நம்பிக்கை கொண்டவராக இந்தியாவுக்கு திரும்பிய ஆண்டு

அ) 1891 ஜூன் ஆ) 1891 ஜூலை இ) 1891 மே ஈ) 1891 ஏப்ரல்

5. கீழ்கண்ட கூற்றுகளில் பொருந்தாதது

1. காந்தியாடிகள் சட்டப்படிப்பு முடித்து இந்தியா திரும்பியவுடன் குஜராத்தில் வழக்குரைஞராக பணியாற்ற முயற்சி மேற்கொண்டார்.

2. அந்த காலகட்டத்தில் தென்னாப்பிரிக்க நிறுவனம் ஒன்று சட்ட உரிமை வழக்குகள் தொடர்பாக காந்தியடிகளின் சேவையை நாடியது.

3. காந்தியடிகள் 1893 மே மாதம் தென்னாப்பிரிக்காவிற்கு புறப்பட்டு சென்றார்.

4. ஜோகனஸ்பார்க் லிருந்து பிரிட்டோரியாவுக்கு ரயில்பயணம் மேற்கொண்டபோது பீட்டர்மாரிட்ஸ்பர்க் ரயில் நிலையத்தின் முதல்வகுப்புப் பெட்டிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்.

அ) 3, 4 தவறு ஆ) 3 மட்டும் தவறு இ) 1 2 3 தவறு ஈ) அனைத்தும் தவறு

6. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவல் வசிக்கும் இந்தியார்களின் கூட்டத்தை கூட்டிய இடம்

அ) ஜோகனஸ்பார்க் ஆ) கேப்டவுன் இ) பிரிட்டோரியா ஈ) டிரான்ஸ்வால்

7. தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளில் பொருந்தாதது.

1. டிரான்ஸ்வாலில் வசித்த இந்தியர்கள் தலை வாரியாக 3 பவுண்டுகளை செலுத்த வேண்டியிருந்தது.

2. அவர்களுக்கென குறிக்கப்பட்ட பகுதிகளை விடுத்து வேறு எந்த இடங்களில் அவர்கள் நிலத்தை சொந்தமாக வைத்துக்கொள்ள முடியாத நிலை இருந்தது.

3. இரவு 9மணிக்குப் பிறகு அனுமதியின்றி வெளியிடங்களுக்கு செல்லமுடியாத நிலையும் இருந்தது.

அ) 1 மட்டும் தவறு ஆ) 1 , 3 தவறு இ) அனைத்தும் சரி ஈ) 3 மட்டும் தவறு

8. காந்தியடிகளுக்கு ----------------மற்றும்------------ஆகியோருடைய எழுத்துகளுடன் அறிமுகம் ஏற்பட்டது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

அ) டால்ஸ்டாய், ஷேக்ஸ்பியர் ஆ) ரஸ்கின், சாமுவேல் இ) டால்ஸ்டாய், ரஸ்கின் ஈ) ஷேக்ஸ்பியர், சாமுவேல்

9. **கீழ்கண்டவற்றுள் தவறானது.**

1. *The Kingdom of God is Within You - Dalstai*
2. *Undo this Last - John raskin*
3. *Civil Disobedience - Dalstai*

அ) அனைத்தும் சரி ஆ) 1 மட்டும் தவறு இ) 3 மட்டும் தவறு ஈ) இரண்டு மட்டும் தவறு

10. சத்தியா கிரகங்களுக்கு பயிற்சி மையமாக திகழ்ந்த ஃபீனிக்ஸ் குடியிருப்பையும், டால்ஸ்டாய் பண்ணையையும் காந்தியடிகள் நிறுவிய ஆண்டு

அ) 1905, 1910 ஆ) 1906, 1911 இ) 1900, 1903 ஈ) 1910, 1913

11. ஸ்மட்ஸ்–காந்தியடிகளின் ஒப்பந்தத்தின் படி இந்தியா தொழிலாளர்களின் மீது விதிக்கப்பட்ட ----------வரி இரத்து செய்யப்பட்டது.

அ) நில வரி ஆ) பண்பாட்டு வரி இ) வெளிநாட்டினர் வரி ஈ) தலைவரி

12. காந்தியின் அரசியல் குரு

அ) திலகர் ஆ) கோபல கிருஷ்ண கோகலே இ) பிபின் சந்திரபால் ஈ) தாதாபாய் நௌரோஜி

13. காந்தியடிகள் தனது வழக்கமான உடைகளை துறந்து சாதாரண வேட்டிக்கு மாறிய காரணமான மாநிலம்

அ) குஜராத் ஆ) மகாராஷ்டிரா இ) ஆந்திரா ஈ) தமிழ்நாடு

14. **தீன் காதியா முறை** பின்பற்றப்பட்ட இடம்

அ) அகமதாபாத் ஆ) சாம்ப்ரான் இ) சபர்மதி ஈ) போர்பந்தர்

15. சாம்பிரான் சத்தியாகிரகத்திற்கு காந்தியடிகளை அழைத்தவர் யார்

அ) பிரஜ்கிஷோர் ஆ) ராஜ்குமார் சுக்லா இ) வல்லபாய் படேல் ஈ) ராஜேந்திரபிரசாத்

16. நாடு முதன்முதலாக ஒத்துழையாமை இயக்கச் செயல்முறைப் பாடத்தைக் கற்றுக்கொண்டதாக தெரிவித்தார்.

அ) ராஜ்குமார் சுக்லா ஆ) பிரஜ்கிஷோர் இ) காந்தியடிகள் ஈ) இராஜேந்திரபிரசாத்

17. காந்தியடிகள் ஒரு மக்கள் தலைவராக உருவாக காரணமாக இருந்த அகமதபாத் மில் வேலைநிறுத்தம், கேதா சத்தியாகிரகம் ஆகியன நடைபெற்ற ஆண்டுகள்.

அ) 1919 ஆ) 1920 இ) 1915 ஈ) 1918



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

18. 1919 இயற்றப்பட்ட ரௌலட் சட்டத்தை ***கருப்பு சட்டம்*** என்றழைத்தவர் யார்.

அ) தாதாபாய் நௌராஜி ஆ) ஜவஹர்லால் நேரு இ) காந்தியடிகள் ஈ) சுபாஷ் சந்திரபோஷ்

19. **கீழ்காணும் கூற்றுகளில் தவறானது.**

1. ரௌலட் சட்டத்தை எதிர்த்து காந்தியடிகள் நாடு தழுவிய சத்தியாகிரகப் போராட்டத்துக்கு 1919 ஏப்ரல் 5 இல் அழைப்பு விடுததார்
2. ரௌலட் சட்டத்துக்கு எதிரான போராட்டங்கள் ஹரியானா குறிப்பாக சண்டிகரில் மற்றும் லாகூரில் தீவிரமடைந்தது.
3. ஏப்ரல் 10 ஆம் நாள் டாக்டர். சைஃபுதீன் கிச்லு, டாக்டர். சத்யபால் என்ற இரண்டு முக்கிய உள்ளூர் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.
4. ரௌலட் சட்டம் எதிர்ப்பு போராட்டத்தை ஒடுக்குவதற்காக படைத்துறை சட்டம் அறிவிக்கப்பட்டது.

அ) அனைத்தும் தவறு ஆ) 1, 2 மட்டும் தவறு இ) 3 மட்டும் தவறு ஈ) 4 மட்டும் சரி

20. அமிர்தசரஸில் உள்ள ஜாலியன் வாலா பாக்கில் ----------நாளில் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அ) 1919 ஏப்ரல் 13 ஆ) 1918 ஏப்ரல் 13 இ) 1920 ஏப்ரல் 13 ஈ) 1922 மார்ச் 02

21. ஜாலியன் வாலாபாக் படுகொலை யின் போது கொல்லப்பட்ட மக்கள்

'அ) 379 ஆ) 389 இ) 399 ஈ) 279

22. **கெய்சர்–இ–ஹிந்த்** என்ற பதக்கத்தை ஜாலியன் வாலாபாக் படுகொலையை கண்டித்து திருப்பி கொடுத்தவர்.

அ) இரபீந்தரநாத் தாகூர் ஆ) காந்தியடிகள் இ) நேரு ஈ) சந்திரபோஸ்

23. **கீழ்கண்ட கூற்றுகளை ஆரய்க**

1. இசுலாமிய மதத்தலைவர் என உலகம் முழுவதும் போற்றப்பட்ட துருக்கியின் கலிபா கடுமையாக நடத்தப்பட்டார். அவருக்கு ஆதரவாக தோற்றுவிக்கப்பட்ட இயக்கமே கிலாபத் இயக்கம் என்றழைக்கப்பட்டது.
2. மௌலான அலி எனும் மற்றும் மௌலான சௌகத் அலி எனும் அலி சகோதரர்கள் தலைமையில் இவ்வியக்கம் நடந்தது.
3. இந்து முஸ்லீம்களை இணைப்பதற்கு கிலாபத் இயக்கத்தை நல்வாய்ப்பாக காந்தியடிகள் கருதினார்.
4. 1919 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மும்மையில் நடைபெற்ற அகில இந்திய கிலாபத் இயக்க மாநாட்டிற்கு காந்தியடிகள் தலைமையேற்றார்.
5. 1920 இல் சூன் 8 இல் அலகாபத்தில் கூடிய கிலாபத் குழுவின் கூட்டம் காந்தியடிகளின் அகிம்சை மற்றும் ஒத்துழையாமை இயக்கத்தை ஏற்றுக்கொண்டது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

அ) அனைத்தும் சரி ஆ) 1 4 5 சரி இ) 1,2,3 சரி ஈ) 5 மட்டும் தவறு

24. ஒத்துழையாமை இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1920 ஆகஸ்ட் 10 ஆ) 1920 ஆகஸ்ட் 01 இ) 1920 ஆகஸ்ட் 31 ஈ) 1920 ஆகஸ்ட் 30

25. 1920 செப்டம்பர் மாதம் -----------நகரில் நடைபெற்ற சிறப்பு கூட்டத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்திற்கு அனுமதி வழங்கியது.

அ) சென்னை ஆ) நாக்பூர் இ) கல்கத்தா ஈ) சூரத்

26. 1920 டிசம்பர் மாதம் ---------------- என்பவர் தலைமையில் நாக்பூரில் நடந்த அமர்வில் ஒத்துழையாமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அ) ஜி. சுப்பிரமணி ஐயர் ஆ) விஜயராகவாச்சியார் இ) இராஜகோபாலச்சாரியர் ஈ) வ.உ.சி

27. வரிகொடா இயக்கத்தை காந்தியடிகள் அறிவித்த ஆண்டு மற்றும் இடம்.

அ) 1922 பிப்ரவரி, பர்தோலி ஆ) 1922 மார்ச், கல்கத்தா இ) 1922 மார்ச், பர்தோலி ணு ஈ) எதுவுமில்லை

28. ஒத்துழையாமை இயக்கத்கதின் ஒரு பகுதியான வரிகொடா இயக்கத்தை காந்தியடிகள் திரும்பக் பெற காணமாக அமைந்த நிகழ்வு

அ) ஜாலியன் வாலாபக்படுகொலை ஆ) சௌரிசௌரா நிகழ்வு

இ) காந்தி கைது ஈ) ஆங்கில அரசின் அடக்கமுறை

29. சௌரி சௌரா நிகழ்வு நடைபெற்ற ஆண்டு.

அ) 1922 மார்ச் 22 ஆ) 1922 சூன் 22 இ) 1922 பிப்ரவரி 5 ஈ) 1922 ஏப்ரல்22

30. **கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க**

1. சௌரி சௌரா நிகழ்வின் போது 22 காவலர்கள் உயிரிழந்தனர்.
2. இயக்கம் ஊக்கம் பெறுவதாக கருதிய ஜவஹர்லால் நேரு, இராஜேந்திரபிரசாத் போன்ற தலைவர்களின் விருப்பத்திற்கு மாறாக இந்த இயக்கம் திரும்பப் பெறப்பட்டது.
3. கைது செய்யப்பட்ட காந்தியடிகள் 1924 இல் விடுதலை செய்யப்பட்டார். போதுமான எண்ணிக்கையில் அவற்றில் பயிற்சி போதுமான எண்ணிக்கையில் அவற்றில் பயிற்சி பெற்ற தலைவர்களும் தொண்டர்களும் இல்லாமல் போனதே காரணம் என்று காந்தியடிகள் நம்பினார்.
4. துருக்கியில் இருந்த கலிபா அலுவலகம் மூடப்பட்டதையடுத்து கிலாபத் இயக்கம் முடிவுக்கு வந்தது.

அ) அனைத்தும் சரி ஆ) 3 மட்டும் தவறு இ) 2 மட்டும் தவறு ஈ) 3, 4 தவறு



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**31. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க**

1. மாற்றத்தை விரும்பாதவர்களால் சுயராஜ்ஜியக் கட்சி தொடங்கப்பட்டது.
2. சுயராஜ்ஜியக் கட்சி 1923 ஜனவரி 1 அன்று சி.ஆர். தாஸ் மற்றும் ஜவஹர்லால் நேரு ஆகியோரால் தொடங்கப்பட்டது.
3. வங்காளத்தில் அரசுடன் ஒத்துழைக்க விரும்பாததால் இந்தியர்களுக்கு என மாற்றப்பட்ட துறைகளில் பொறுப்பேற்க அவர்கள் மறுத்துவிட்டனர்.
4. 1925 இல் அக்கட்சியின் தலைவர் சி.ஆர். தாஸ் மறைந்த பிறகு சுயராஜ்ஜிய கட்சி வீழ்ச்சி காணத் தொடங்கியது. 1926 இல் சட்டப்பேரவைகளில் இருந்து சுயராஜ்ஜிய கட்சி விலகிக் கொண்டது.

அ) அனைத்தும் சரி ஆ) 3,4 தவறு இ) 1 5 தவறு ஈ) 1, 2 தவறு

32. இரட்டை ஆட்சி முறையை அறிமுகப்படுத்திய இந்திய அரசு சட்டம்.

அ) 1909 ஆ) 1935 இ) 1919 ஈ) 1893

33. கீழ்கண்ட துறைகளில் பொருந்தாத துறை

அ) நிதி ஆ) பாதுகாப்பு இ) காவல்துறை ஈ) பொதுப்பணிதுறை

34. ***உங்கள் மாவட்டங்களுக்குச் செல்லுங்கள் கதர், இந்து–முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு ஆகியன பற்றிய செய்திகளைப் பரப்புங்கள். இளைஞர்களை ஒன்றுதிரட்டி அவர்களை சுயராஜ்யத்தின் உண்மையான வீரர்களாக உருமாற்றுங்கள்*** – என்று கூறியவர்.

அ) சி.ஆர் தாஸ் ஆ) நேரு இ) காந்தியடிகள் ஈ) சுபாஷ் சந்திர போஷ்

35. வகுப்புவாத அரசியலில் ஈடுபட்ட இந்துக்கள் மற்றும் முஸ்லிம்களின் இதயங்களை ஈர்க்கும் வகையில் காந்தியடிகள்––––––––––– நாள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

அ) 1924 இல் 22 நாள் ஆ) 1924 இல் 21 நாள் இ) 1925 இல் 22 நாள் ஈ) 1924 இல் 27 நாள்

36. இந்திய அரசியல் சாசன சீர்திருத்தங்களுக்கான இந்தியா சட்டபூர்வ ஆணையத்தை (சைமன் குழு) அறிவிப்பதாக காந்தியடிகள் அறிவித்த ஆண்டு

அ) 1927 நவம்பர் 08 ஆ) 1927 அக்டோபர் 9 இ) 1927 ஜனவரி 1 ஈ) 1927 மார்ச் 09

37. லால லஜிபதிராய் எந்த போராட்டத்தில் கலந்து கொண்டு உயிர்நீத்தார்.

அ) ஜாலியன் வாலபாக் படுகொலை ஆ) சௌரி சௌரி போராட்டம்.

இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஈ) சைமன் குழு எதிர்ப்பு போராட்டம்.

**38. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க**

1. இந்தியாவில் இருந்த பல்பேறு அரசியல் கட்சிகளை சைமன் குழு புறக்கணிப்பு ஒன்றிணைத்தது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

**2.** சைமன் குழு முன்மொழிவுகளக்கு மாற்றாக இந்தியாவுக்கு அரசியல் சாசனம் உருவாக்குவதை குறிக்கோளாகக் கொண்டு 1927 இல் அனைத்துக் கட்சி மாநாடு நடைபெற்றது.

**3.** இந்த கொள்கைகளின் அடிப்படையில் அரசியல் சாசன வரைவுக்காக திட்டம் வகுக்க ஜவஹர்லால் நேரு தலைமையிலான கமிட்டி அமைக்கப்பட்டது.

**4.** பொது வாக்களிப்பு முறையும் அடிப்படை உரிமைகளும் வழங்கப்படுவது குறித்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

அ) அனைத்தும் சரி ஆ) 3 மட்டும் தவறு இ) 2 3 தவறு ஈ) 2, 4 தவறு

39. முஸ்லீம்களுக்கு சட்டமன்றத்தில் மூன்றில் ஒருபங்கு இடங்கள் ஒதுக்க வேண்டி 14 அம்சங்கள் கொண்ட அறிக்கையை வெளியிட்டவர்.

அ) லியாகத் அலி ஆ) சௌகத் அலி இ) முகமது அலி ஜின்னா ஈ) பக்ருதின் தியாப்ஜி

40. **முழுமையான சுயராஜ்ஜியம்** வேண்டும் என்றும் வட்டமேசை மாநாடுகளை புறக்கணிப்பது என்றும் முடிவு செய்யப்பட்ட காங்கிரஸ் மாநாடு நடைபெற்ற பகுதி

அ) மும்மை ஆ) சென்னை இ) கல்கத்தா ஈ) லாகூர்

41. **முதல் சுதந்திர திருநாள்** கொண்டாடப்பட்ட நாள்

அ) 1929 டிசம்பர் 24 ஆ) 1930 டிசம்பர் 24 இ) 1930 ஜனவரி 28 ஈ) 1930 ஜனவரி 26

42. காந்தியடிகள் தனது உப்பு சத்தியாகிரகத்தை சபர்மதி ஆசிரம்த்தில் 78 பேர்களுடன் தொடங்கிய நாள்

அ) 1930 ஏப்ரல் 6 ஆ) 1930 ஏப்ரல் 5 இ) 1930 மார்ச் 12 ஈ) 1930 ஏப்ரல் 12

43. உப்பு சத்தியகிரக போராட்டத்தை வடமேற்கு எல்லை மாகாணத்தில் தலைமையேற்று நடத்தியவர் யார்

அ) கான் அப்துர் கபார்கான் ஆ) இராஜாஜி இ) ஜவ்ஹர்லால் நேரு ஈ) சி.ஆர் தாஸ்

44. **குடைகிட்மட்கர்** இயக்கத்தை தொடங்கியவர்

அ) கான் அப்துர் கபார்கான் ஆ) இராஜாஜி இ) ஜவ்ஹர்லால் நேரு ஈ) சி.ஆர் தாஸ்

45. ஆங்கிலேயர்கள் முதலாவது வனச்சட்டத்தை நிறைவேற்றிய ஆண்டு

அ) 1865 ஆ) 1856 இ) 1858 ஈ) 1893

46. கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் வாழ்ந்த பழங்குடியின மக்களுக்காக போராடிய தலைவர்

அ) கிருபாளானி ஆ)பிர்சா முண்டா இ) அல்லூரி சீதாராம ராஜீ ஈ) வெங்கையா

47. உப்பு சத்தியாகிரகத்தில் கைது செய்யப்பட்டு காந்தியடிகள் அடைக்கப்பட்ட சிறைசாலை

அ) பெல்காம் ஆ) எரவாடா இ) பூனா சிறை ஈ) டெல்லி சிறை



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

48. இந்தியா சந்தித்த மக்கள்போராட்டத்திலேயே மிகப்பெரிய போராட்டம்

அ) வெள்ளையயே வெளியேறு இயக்கம்.

அ) ஒத்துழையாமை இயக்கம்.

இ) உப்பு சத்தியகிரக போராட்டம்.

ஈ) 1857 பெரும்கலகம்.

49. முதலாவது வட்டமேசை மாநாடு நடைபெற்ற ஆண்டு

அ) 1929 ஆ) 1930 இ) 1931 ஈ) 1932

50. சட்டமறுப்பு இயக்கத்தை கைவிட்டுவிட்டு காங்கிரஸ் எத்தனையாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டது.

அ) முதலாவது ஆ) இரண்டாவது இ) மூன்றாவது ஈ) அ மற்றும் இ

51. காந்தி – இர்வின் ஒப்பந்தம் நடைபெற்ற ஆண்டு

அ) 1931 பிப்ர 05 ஆ) 1931 மார்ச் 5 இ) 1931 ஏப்ரல் 05 ஈ) 1931 ஜனவரி 5

52. **1931** செப்டம்பர் 7 ஆம் நாள் நடந்த இரண்டாவது வட்டமேசை மாநாடு தோல்வில் முடிந்ததற்க காரணம்

**அ)** சிறுபான்மையினருக்கு தனித் தொகுதிகள் ஒதுக்கியது.

**ஆ)** சட்ட மறுப்பு இயக்கத்தை நிறுத்தியதற்காக

**இ)** ஜாலியன் படுகொலை காரணத்திற்காக

**ஈ)** மேற்கண்ட எதுவுமில்லை.

53. இரண்டாவது வட்டமேசை தோல்வில் முடிந்ததை அடுத்து மீண்டும் தொடங்கப்பட்ட சட்ட மறுப்பு இயக்கத்திற்கு மீண்டும் தொடங்கிய போது கைது செய்யப்பட்ட நாள்.

அ) 1932 பிப்ர 05 ஆ) 1931 மார்ச் 5 இ) 1932 ஏப்ரல் 05 ஈ) 1932 ஜனவரி 4

54. வகுப்பு வாரி ஒதுக்கீட்டை ராம்சே மெக்டொனால்டு அவித்த ஆண்டு

அ) 1932 பிப்ர 05 ஆ) 1932 மார்ச் 5 இ) 1932ஆகஸ்ட் 16 ஈ) 1931 ஜனவரி 5

55. காந்தியடிகள் வகுப்புவாரி ஒதுக்கீட்டை எதிர்க்க காரணம்.

அ) முஸ்லீம்களுக்கு இட ஒதுக்கீடு ஆ) சீக்கியர்களுக்கு இட ஒதுக்கீடு

இ) கிறிஸ்தவர்களுக்கு இட ஒதுக்கீடு ஈ) ஒடுக்கப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு

56. காந்தியடிகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு தனித்தொகுதிகள் ஒதுக்கீட்டிற்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் போராட்டத்தை தொடங்கிய ஆண்டு



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

அ) 1932 செப்டம்பர் 05 ஆ) 1932 செப்டம்பர்2 5 இ) 1932 செப்டம்பர்20 ஈ) 1931 ஜனவரி05

57. **கீழ்கண்டவற்றில் பொருந்தாதது.**

1. பூனா ஒப்பந்தம் காந்தியடிகளுக்கும் ராம்செ மெக்டொனால்டுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது.
2. தனித்தொகுதிகள் பற்றிய கொள்கைகள் கைவிடப்பட்டன. மாறாக, ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களக்கு இடஒதுக்கீடு வழங்கும் கூட்டுத்தொகுதிகள் பற்றிய யோசனை ஏற்கப்பட்டது.
3. ஒடுக்கப்பட்ட வகுப்பினருக்கான இடங்கள் 71 லிருந்து 147 ஆக அதிகாக்கப்பட்டது. மத்திய சட்டப்பேரவையில் 18 சதவிகித இடங்கள் ஒதுக்கப்பட்டன.

அ) அனைத்தும் சரி ஆ) அனைத்தும் தவறு இ) 1, 3 தவறு ஈ) 1 , 2 தவறு

58. அரிஜன சேவை சங்கத்தை தொடங்கியவர் யார்.

அ) பி.ஆர் அம்பேத்கார் ஆ) எம்.சி ராஜா இ) மயிலைசிங்காரவேலார் ஈ) காந்தியடிகள்

59. மக்கள் மது பழக்கத்தை கைவிட வேண்டி இரண்டு உண்ணாவரதப் போராட்டங்களை காந்தியடிகள் நடத்திய ஆண்டு

அ) 1933 ஆ) 1932 இ) 1934 ஈ) 1935

60. கோவில் நுழைவு நாள் என எந்நாளிள் அனுசரிக்கப்பட்டது.

அ) 1933 செப்டம்பர் 05 ஆ) 1933 செப்டம்பர்2 5 இ) 1933 ஜனவரி 08 ஈ) 1931 ஜனவரி05

61. இந்தியாவில் கம்யூனிச இயக்கம் எம்.என். ராய், அபானி முகர்ஜி, ஆச்சார்யா ஆகியோரால் இ தஷ்கண்டில் தொடங்கப்பட்ட ஆண்டு.

அ) 1918 ஆ) 1920 இ) 1921 ஈ) 1931

62. கான்பூர் சதி நடைபெற்ற ஆண்டு.

அ) 1918 ஆ) 1924 இ) 1921 ஈ) 1931

63. **கீழ்கண்ட கூற்றுகளில் பொருந்தாதது.**

1. 1925 ஆம் ஆண்டு கான்பூரில் அகில இந்திய பொதுவுடைமை மாநாடு நடந்தது. இதில் எம்.சி ராஜா தலைமையுரையாற்றினார்.
2. அகில இந்திய தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் கட்சி 1928 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
3. 1929 ஆம் ஆண்டு மீரட் சதித்திட்ட வழக்கு காரணமாக இந்த திசையில் முன்னேற்றம் தடைப்பட்டது.
4. முசாஃபர் அஹமது, எஸ்.ஏ. டாங்கே, காட்டே, அதிகாரி, ஜோஷி, மிராஜ்கர், ஷௌகத்தா உஸ்மானி, பிலிப் ஸ்டிராட் மற்றும் இதர இருபத்துமூன்று நபர்கள் ரயில்வே துறையில் வேலைநிறுத்தம் செய்ததற்காக கைது செய்யப்பட்டனர்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

அ) அனைத்தும் சரி ஆ) 3 ,4 சரி இ) 1,2 சரி ஈ) 1 மட்டும் தவறு

64. **1924** இல் இந்துஸ்தான் குடியரசு ராணுவம் ------------நகரில் உருவாக்கப்பட்டது.

அ) சிங்கப்பூர் ஆ) கான்பூர் இ) ஜெர்மனி ஈ) டெல்லி

65. **காகோரி சதி** நடைபெற்ற ஆண்டு

அ) 1925 ஆ) 1926 இ) 1928 ஈ) 1929

66. **இந்துஸ்தான் சமதர்மவாத குடியரசு அமைப்பு** என்று அமைப்பு தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1925 ஆ) 1926 இ) 1928 ஈ) 1929

67. மத்திய சட்டப்பேரவையில் புகைக்குண்டை பகத்சிங்கும் , தத்தும வீசிய ஆண்டு.

அ) 1925 ஆ) 1926 இ) 1928 ஈ) 1929

68. **இன்குலாப் ஜிந்தாபாத்** என்று முழங்கியவர்

**அ)** பகத்சிங் ஆ) சுபாஷ்சந்திரா போஷ் இ) காந்தியடிகள் ஈ) நேரு

69. சூர்யாசென் என்பவரால் நடத்தப்பட்ட சிட்டகாங்க ஆயுதப்படை தாக்குதல் நடைபெற்ற ஆண்டு.

அ) 1930 மே ஆ) 1930ஏப்ரல் இ) 1930 மே ஈ) 1929 ஏப்ரல்

70. பொதுவுடைமை கட்சி தடைசெய்யப்பட்டு ஆண்டு

அ) 1933 ஆ) 1935 இ) 1934 ஈ) 1929

71. 1934 இல் காங்கிரஸ் சமதர்ம (சோஷலிஷ) கட்சி யை உருவாக்கியவர்கள் யார்.

அ) ஜெயப்பிரகாஷ்நாராயன். ஆ) ஆச்சார்ய நரேந்திரதேவ்

இ) மினுசானி ஈ) மேற்கண்ட அனைவரும்

72. ***ஒரு சிலர் அதிகாரத்துக்கு வருவதால் உண்மையான சுயராஜ்ஜியம் கிடைத்துவிடாது, ஆனால் தாங்கள் பெற்ற அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தப்படும்போது நிர்வாகத்தினரை எதிர்க்கும் திறனை அனைவரும் பெறச்செய்வதே சுயராஜ்ஜியமாகும்.–*** என்று கூறியவர்.

அ) சி.ஆர் தாஸ் ஆ) மோதிலால் நேரு இ) மேற்கண்ட இருவரும் ஈ) காந்தியடிகள்

73. மாகாணங்களுக்கு தன்னாட்சி அதிகாரம், மத்தியில் இரட்டையாட்சி ஆகியவற்றை அறிமுகப்படுத்திய சட்டம்.

அ) 1909 ஆ) 1919 இ) 1935 ஈ) 1893

74. **கீழ்கண்டவற்றுள் பொருந்தாதது.**

**1.** 1935 அரசுச் சட்டத்தின் படி, அகில இந்திய கூட்டமைப்பு ஏற்பட வேண்டும்

**2.** 11 மாகாணங்கள், 6 தலைமை ஆணையரக மாகாணங்கள் இடம்பெற்றன.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

**3.** அனைத்து துறைகளும் இந்திய அமைச்சர்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன.

**4.** மாகாணங்களில் நடைமுறையில் இருந்த இரட்டை ஆட்சி முறை மத்திய அரசக்கும் விரிவாக்கப்பட்டது.

**5.** வாக்குரிமையானது வயதின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது.

**6.** இந்த சட்டத்தின்படி பர்மா இந்தியாவில் இருந்து பிரிக்கப்பட்டது.

அ) அனைத்தும் சரி ஆ) 2 மட்டும் தவறு இ) 5 மட்டும் தவறு ஈ) 1, 5 தவறு

75. **1937** இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் எத்தனை தொகுதிகளில் வெற்றிபெற்றது.

அ) 11 ஆ) 7 இ) 8 ஈ)9

76. **1937** இல் இரண்டாம் உலகப்போரில் இந்திய பிரதிநிதிகளை ஆலோசிக்காமல் போரில ஈடுபத்தியதற்காக காங்கிரஸ் எல்லா மாகாணங்களிலம் பதவி விலகியது. இதை **மீட்பு நாள்** என்று அறிவித்தவர்.

அ) காந்தி ஆ) சுபாஷ்சந்திரபோஸ் இ) அல்சகோதரர்கள் ஈ) ஜின்னா

77. காந்தியடிகளின் வேட்பாளரான பட்டாபி சீதாராமய்யாவை வீழ்த்தி **1939** இல் இந்திய தேசிய காங்கிரசின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்.

அ) கிருபாளினி ஆ) நேரு இ) சுபாஷ் சந்திர போஷ் ஈ) மசூம்தார்.

78. பார்வார்டு பிளாக் கட்சியை தொடங்கியவர் யார்.

அ) முத்து இராமலிங்கம் ஆ) நேரு இ) சுபாஷ் சந்திர போஷ் ஈ) மசூம்தார்

79. பொதுவுமைமை கட்சியின் மீதான தடை விலக்கப்பட்ட ஆண்டு.

அ) 1940 ஆ) 1944 இ) 1942 ஈ) 1946

80. பாகிஸ்தான் உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தை 1933 ஆம் ஆண்டு வெளிப்படுத்தியவர்

அ) முகமது அலி ஜின்னா ஆ) முகமது இக்பால் இ) ரஹ்மத் அலி ஈ) லியாகத் அலி

81. தனிநபர் சத்தியாகிரகத்தை வினோபா பாவே தொடங்கிய நாள்

**அ)** 1940 அக்டோபர் 16 ஆ) 1940 அக்டோபர் 17

இ) 1940 மே 17 ஈ) 1940 ஏப்ரல் 24

82. **கிரிப்ஸ் தூதுக்குழு** அமைக்கப்பட்ட ஆண்டு.

**அ)** 1940 மே22 ஆ) 1940 ஏப்ரல்22 இ) 1942 மார்ச் 22 ஈ) 1940 ஏப்ரல் 27

83. **கீழ்கண்டவற்றில் பொருந்தாதது**

**1.** போருக்கு பிறகு தன்னாட்சி (டொமினியன் தகுதி) வழங்குவது



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

2. பாகிஸ்தான் உருவாக்க கோரிக்கையை ஏற்கும் விதமாக இந்திய இளவரசர்கள் பிரிட்டிஷாருடன் தனி ஒப்பந்தத்தைக் கையெழுத்திடலாம்.

3. போரின் போது பாதுகாப்புத் துறை இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருப்பது.

4. ***திவாலாகி கொண்டிருக்கும் வங்கியில் பின் தேதியிட் காசோலை*** என காந்தியடிகள் இந்த திட்டங்களை அழைத்தார்.

அ) அனைத்தும் சரி ஆ) 2 மட்டும் தவறு இ) 2,3 தவறு ஈ) 3 மட்டும் தவறு

84. வெள்ளையனே வெளியேறு இயக்க தீர்மானத்திற்கு காங்கிரஸ் கமிட்டி வித்திட்ட நாள்

அ) 1942 மே22 ஆ) 1942 ஆகஸ்டு 09 இ) 1942 ஆகஸ்டு 08 ஈ) 1940 ஏப்ரல் 27

85. ***நாம் நமது முயற்சியில் விளைவாக இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தருவோம், அல்லது நாம் நமது அடிமைத்தனத்தைக் காண உயிருடன் இருக்கமாட்டோம், செய் அல்லது செத்து மடி*** – என்று கூறியவர்

அ) நேதாஜி ஆ) நேரு இ) ஜின்னா ஈ) காந்தி

86. 1942 வரை இயங்கிய காங்கிரஸ் வானொலியை நிறுவியவர் யார்.

அ) நிரோஷா மேத்தா ஆ) அருணா ஆசப்அலி இ) உஷா மேத்தா ஈ) ராமநாத் மிஷ்ரா

87. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் காந்தி 1943 பிப்ரவரி மாதம் எத்தனை நாள்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

அ) 27 ஆ) 28 இ) 17 ஈ) 21

88. சுபாஷ் சந்திர போஷ் வீட்டுக்காவலிலிருந்து ஆப்கானிஸ்தான் தப்பியோடிய ஆண்டு

அ) 1941 ஜனவரி ஆ) 1941 ஏப்ரல் இ) 1941 மார்ச் ஈ) 1941 மே

89. **ஆசாத் ஹிந்த ஃபாஜ்** ஐ உருவாக்கியவர்

அ) நேதாஜீ ஆ) பகத்சிங் இ) மோகன்சிங் ஈ) ராணி லஷ்மி பாய்

90. சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசை சுபாஷ் சந்திர போஸ் நிறுவிய நாடு

அ) மலேசியா ஆ) பர்மா இ) சிங்கப்பூர் ஈ) ஜப்பான்

91. **தில்லி சலோ** என்று கூறியவர்

அ) பகத் சிங் ஆ) காந்திஜி இ) நேதாஜி ஈ) நேரு

92. ராயல் இந்திய கடற்படை மாலுமிகளின் கிளர்ச்சி பம்பாயில் நடைபெற்ற ஆண்டு.

அ) 1946 ஆ) 1945 இ) 1944 ஈ) 1954

93. அரசப்பிரதிநியின் செயற்குழுவில் இந்துக்களும் முஸ்லிம்களும் சம எண்ணிக்கையில் இடம்பெற்ற ஓர் இடைக்கால அரசுக்கு வகை செய்த திட்டம்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

அ) வேவல் திட்டம் ஆ) அட்லி திட்டம் இ) இராஜாஜி திட்டம் ஈ) நேரு அறிக்கை

94. வேவல் திட்டம் அறிவிக்கப்பட்ட நாள்

அ) 1945 மே22 ஆ) 1945 சூன் 14 இ) 1945 மார்ச் 22 ஈ) 1940 ஏப்ரல் 27

95. அமைச்சரவை தூதுக்குழுவில் இடம்பெறாதவர்கள்

அ) பெதிக் லாரன்ஸ் ஆ) சர் ஸ்டராஃபோர் கிரிப்ஸ் இ) அலெக்சாண்டர் ஈ) வேவல் பிரபு

96. **நேரடி நடவடிக்கை நாளாக** ஜின்னாவில் அறிவிக்கப்பட்ட நாள்

அ) 1946 மே16 ஆ) 1946 ஏப்ரல்16 இ) 1946 மார்ச் 16 ஈ) 1946 ஆகஸ்ட் 16

97. ஜவஹர்லால் நேரு தலைமையிலான இடைக்கால அரசு அமைக்கப்பட்ட ஆண்டு

அ) 1946 செப்டம்பர் ஆ) 1946 நவம்பர் இ) 1946 ஆகஸ்ட் ஈ) 1946 டிசம்பர்

98. மவுண்ட் பேட்டன் திட்டம் அறிவிக்கப்பட்ட நாள்

அ) 1947 சூலை 18 ஆ) 1947 சூன் 3 இ) 1947 ஆகஸ்ட் 15 ஈ) 1947 சூலை 22

99. **கீழ்கண்டவற்றில் பொருந்தாதது.**

1. இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு, பிரிட்டனின் தன்னாட்சிப் பகுதி (டொமினியன்) என்ற தகுதியுடன் அதிகாரமாற்றம் நடைபெறும்.
2. சிற்றரசுகள் இந்தியா அல்லது பாகிஸ்தானில் சேரவேண்டும்.
3. ராட்கிளிப் பிரவ்ன் தலைமயில் எல்லைகள் நிர்ணயிக்கும் ஆணையம் அமைக்கப்பட்டடு அதிகாரமாற்றத்திற்குப் பிறகு இந்த ஆணையத்தின் முடிவு அறிவிக்கப்படும்.
4. பஞ்சாப் மற்றும் வங்காள சட்டப்பேரவைகள் அவைக் பிரிக்கப்பட வேண்டுமா என்பது பற்றி வாக்கெடுப்பு நடத்தப்படும்.

அ) அனைத்தும் சரி ஆ) 2 4 5 தவறு

இ) 1 4 மட்டும் தவறு ஈ) 1 2 3 தவறு

100. இந்திய விடுதலை சட்டம் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நாள்

அ) 1947 சூலை 18 ஆ) 1947 சூன் 3 இ) 1947 ஆகஸ்ட் 15 ஈ) 1947 சூலை 22



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

( இவ்வினாக்ளுக்கான விடைகள் அனைத்தும் **Periyar Payirchi Pattarai** You Tube channel இல் பதிவிடப்படும். மேலும் Description Box இல் இவ்வினாத்தாள் மற்றும் விடையுடன் கூடிய பிரதியை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் )

முந்தைய தேர்வுகளின் வினா மற்றும் விடைகளை பெற இங்கே
https://www.youtube.com/watch?v=4duApSnvEx8&t=48s கிளிசெய்து
**Subscribe** செய்து கொள்ளவும்

**Answers**

1. c
2. B
3. D
4. A
5. D
6. D
7. C
8. C
9. C
10. C
11. D
12. B
13. D
14. B
15. B
16. C
17. D
18. C
19. D
20. A
21. A
22. B
23. C
24. B
25. C
26. B
27. A
28. B
29. C
30. C
31. D
32. C
33. D
34. C
35. B
36. A
37. D
38. C
39. C
40. D
41. D
42. C
43. A
44. A
45. A
46. C
47. B
48. C
49. B
50. B
51. B
52. A
53. D
54. C
55. D
56. C
57. C
58. D
59. D
60. C
61. B
62. B
63. D
64. B
65. A
66. C
67. D
68. A
69. B
70. C
71. D
72. D
73. C
74. C
75. B
76. D
77. C
78. C
79. C
80. C
81. B
82. C
83. D
84. C
85. D
86. C
87. D
88. D
89. C
90. C
91. C
92. A
93. A
94. B
95. D
96. D
97. A
98. B
99. A
100. A

www.Padasalai.Net www.TrbTnpsc.Com



# பெரியார் பயிற்சி பட்டறை



சேலம் மாவட்டம்–636 112.

தொடர்புக்கு – 8072152951

**பாடம் :** வரலாறு (தமிழ்நாட்டில் விடுதலை போராட்டம்)

**நாள் :** 25.05.2020

**மொத்த வினாக்கள்–95** **தேர்வு –10**

**( இவ்வினாக்ளுக்கான விடைகள் அனைத்தும் Periyar Payirchi Pattarai You Tube channel இல் பதிவிடப்படும். மேலும் Description Box இல் இவ்வினாத்தாள் மற்றும் விடையுடன் கூடிய பிரதியை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் )**

---

1. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க

   1. காலனியாட்சியை எதிர்ப்பதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்ந்தது.
   2. 17 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலேயே பாளையக்காரர்கள், தமிழ்நாட்டில் தங்கள் அரசியல் ஆதிக்கத்தை நிறுவமுயன்ற ஆங்கிலேயர்களின் முயற்சிகளை எதிர்த்தனர்.
   3. 18 ஆம் நூற்றாண்டில் இடைப்பகுதியில் சென்னையில் உருவான நடுத்தர வர்க்கத்தை சேர்ந்த, கல்விகற்ற நபர்களைக் கொண்ட குழுக்கள் பொதுவிஷயங்களில் அக்கறை செலுத்தத் தொடங்கின.
   4. தென்னிந்தியாவில் தொடங்கப்பெற்ற காலத்தால் முற்பட்ட அமைப்பு சென்னை மகாஜன சங்கமாகும்.

   அ) அனைத்தும் தவறு ஆ) 3,4 மட்டும் தவறு இ) 2 3 4 தவறு ஈ) 1 2 மட்டும் தவறு

2. சென்னைவாசிகள் சங்கத்தை தொடங்கியவர்கள் யார்.

   அ) கஜீலு லட்சுமிநரசு ஆ) சீனிவாசனார் இ) அ மட்டும் ஈ) அ மற்றும் ஆ

3. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க

   1. சென்னை வாசிகள் சங்கம் 1852 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
   2. இவ்வமைப்பில் வணிகர்களே அதிக எண்ணிக்கையில் அங்கம் வகித்தனர்.
   3. மேலும் கிறித்தவ சமயப்பரப்பாளர்களின் செயல்பாடுளுக்கு அரசு எதிர்ப்பு தெரிவித்ததை ஆதரித்தனர்.
   4. வருவாய்த்துறை அதிகாரிகளால் விவசாயிகள் சித்திரவதைப்படுத்தப்படுவதற்கு எதிராக இவ்வமைப்பு நடத்தி ய போராட்டம் முக்கியமான பங்களிப்பாகும்.

   அ) அனைத்தும் சரி ஆ) 2 மட்டும் தவறு இ) 4 மட்டும் தவறு ஈ) 3 மட்டும் தவறு



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

4. சித்திரவதை சட்டம் ஒழிக்கப்பட காரணமாக இருந்த அமைப்பு

அ) சென்னைவாசிகள் அமைப்பு ஆ) சென்னை மகஜன சங்கம்.

இ) பிராமணர் அல்லாதோர் சங்கம் இ) நீதிக்கட்சி

5. சென்னை வாசிகள் சங்கம் எந்த ஆண்டுக்கு பின்பு செயலிழந்த போனது.

அ) 1861 ஆ) 1862 இ) 1863 ஈ) 1864

6. சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக நியமிக்கப்பட்டவரின் பெயர்

அ) டி. முத்துலிங்கம் ஆ) டி. முத்துராமன் இ) டி. முத்துசாமி ஈ) டி. இராமசாமி

7. சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக நியமிக்கப்பட்ட ஆண்டு

அ) 1878 ஆ) 1877 இ) 1876 ஈ) 1875

8. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க

1. ஜி. சுப்பிரமணியம், எம். வீரராகவாச்சாரி மற்றும் இவர்களின் நண்பர்கள் நால்வர் ஆகியோர் இணைந்து 1878 இல் சுதேச மித்ரன் எனும் செய்திப் பத்திரிகையைச் தொடங்கினர்.
2. ஜி. சுப்பிரமணியம் 1891 தி இந்து என்ற பெயரில் தமிழில் ஒரு தேசியப் பருவ இதழையும் தொடங்கினார்.
3. 1899 இல் சுதேசமித்ரன் நாளிதழாக மாறியது.
4. தி இந்து, சுதேசமித்ரன் ஆகிய பத்திரிகைகள் தொடங்கப்பட்டது. இந்தியன் பேட்ரியாட், சவுத் இந்தியன் மெயில், மெட்ராஸ் ஸ்டாண்டர்ட், தேசாபிமானி, விஜயா, சூர்யோதயம், இந்தியா போன்ற உள்நாட்டுப் பத்திரிகைகள் தொடங்கப்படுவதற்கு ஊக்கமளித்தது.

அ) அனைத்தும் சரி ஆ) அனைத்தும் தவறு இ) 1, 4 தவறு ஈ) 1, 2 தவறு

9. தென்னிந்தியாவில் தெளிவான தேசிய நோக்கங்களுடன் துவங்கப்பெற்ற தொடக்கால அமைப்பு -------

அ) சென்னை வாசிகள் சங்கம் ஆ) சென்னை மகாஜன சங்கம்

இ) பிராமணரல்லோதோர் இயக்கம் ஈ) சுய மரியாதை இயக்கம்.

10. சென்னை மகாஜன சபை தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1885 மே 16 ஆ) 1886 மே 16 இ) 1884 மே 16 ஈ) 1887 மே 18

11. சென்னை மகாஜன சபையின் தலைவர் மற்றும் செயலாளர்கள் முறையே

அ) அனந்தாச்சார்லு, ரங்கையா ஆ) அனந்தசார்லு, சீனிவாசன்

இ) வீரராகவாச்சாரி, ரங்கையா ஈ) ரங்கையா, அனந்தாச்சார்லு



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

12. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க ( சென்னை மகாஜன சபையின் கோரிக்கைகள்)

1. குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் இந்தியாவில் நடத்தப்பட வேண்டும்.
2. லண்டனிலுள்ள இந்தியக் கவுன்சிலை மூடுவது.
3. வரிகளை குறைப்பது.
4. இராணுவ குடியியல் நிர்வாகச் செலவுகளைக் குறைப்பது ஆகியன இவ்வமைப்பின் கோரிக்கையாகும்.

அ) அனைத்தும் சரி ஆ) 2 மட்டும் தவறு இ) 2 3 தவறு ஈ) 2 3 4 சரி

13. கீழ்கண்டவர்களில் பொருந்தாதவர்கள்

அ) வி.எஸ். சீனிவாச சாஸ்திரி ஆ) பி.எஸ் சிவசாமி இ) வி. கிருஷ்ணசாமி ஈ) பாரதியார்

14. காங்கிரஸ் உருவாக்கப்படுவதற்கு முன்பாக தாதாபாய் நௌரோஜி, கே.டி தெலாங், சுரேந்திரநாத் பானர்ஜி , ஜி.சுப்பிரமணியம், பி. ரங்கையா, பி. அனந்தாச்சார்லு ஆகியோர் கலந்து கொண்ட கூட்டம் சென்னை பிரம்ம ஞான சபையில் நடைபெற்ற ஆண்டு.

அ) 1884 டிசம்பர் ஆ) 1884 நவம்பர் இ) 1884 மார்ச் ஈ) 1888 டிசம்பர்

15. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க

1. இந்தியக் தேசியக் காங்கிரசின் முதற்கூட்டம் 1885 இல் பம்பாயில் நடைபெற்றது.
2. மொத்தம் 72 பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள்
3. தமிழ்நாட்டில் இருந்து 23 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.
4. ஜி. சுப்பிரமணியம் தனது எழுத்துக்களின் மூலமாக தேசியத்தை முன்னெடுத்தவர் ஆவார். இந்தியா பொருளாதாரரீதியாக ஆங்கிலேயர்களால் சுரண்டப்படுவதைப் புரிந்துகொள்ள அவர் செய்த பங்களிப்புகளில் அவர் நௌரோஜி மற்றும் கோகலே ஆகியோருக்கு இணையானவராவர்

அ) அனைத்தும் சரி ஆ) 4 மட்டும தவறு இ) 3 மட்டும் தவறு ஈ) 2 மட்டும் தவறு

16. இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது மாநாடு எங்கு நடைபெற்றது

அ) சென்னை ஆ) கல்கத்தா இ) டெல்லி ஈ) மும்பை

17. இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது அமர்விற்க்கு தலைமை தாங்கியவர்

அ) உமேஷ் சந்திர பானர்ஜி ஆ) பக்ருதின் தியாப்தி இ) தாதாபாய் நௌரோஜி ஈ) சுரேந்திரநாத் பானர்ஜி

18. இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது மாநாடு நடைபெற்ற இடம்.

அ) கல்கத்தா ஆ) டெல்லி இ)மாக்கீஸ் கார்டன் ஈ) மும்பை



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

19. சென்னையில் முதன் முதலாக இந்திய தேசிய காங்கிரசின் மாநாடு நடைபெற்ற ஆண்டு.

அ) 1888 ஆ) 1886 இ) 1887 ஈ) 1885

20. சென்னையில் முதலாவதாக இந்தியா தேசிய காங்கிரசின் மாநாட்டில் கலந்துகொண்ட சென்னை மாகாணத்தின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை

அ) 607 ஆ) 362 இ) 367 ஈ) 22

21. வங்கப் பிரிவினை நடைபெற்ற ஆண்டு

அ) 1899 ஆ) 1903 இ) 1905 ஈ) 1906

22. சுதேசி இயக்கம் தோன்றக் காரணமான நிகழ்வு

அ) பத்திரிக்கை தடை சட்டம் ஆ) வங்கப்பிரிவினை

இ) சௌரி சௌரா நிகழ்வு ஈ) ஜாலியன் வாலாபாக் படுகொலை

23. கீழ்கண்டவற்றில் சுதேசி நடவடிக்கைகளில் பொருந்தாதது.

1. அந்நியப் பண்டங்களை புறக்கணித்தல்
2. தேசியக் கல்வியை முன்னெடுத்தல்
3. வங்காளம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய பகுதிகளில் புகழ்பெற்ற தலைவர்கள் தோன்றினார்கள்
4. மேற்கண்ட முன்மொழிவுகள் அனைத்தும் சென்னை காங்கிரஸ் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்டவை

அ) அனைத்தும் சரி ஆ) 3 மட்டும் தவறு இ) 4 மட்டும் தவறு ஈ) 4 3 தவறு

24. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க.

1. மக்களின் நாட்டுப்பற்று உணர்வுகளைத் தட்டி எழுப்பியதில் பாரதிதாசனின் தேசபக்திப் பாடல்கள் மிக முக்கியமானவையாகும்.
2. சுதேசமித்ரன், விஜயா ஆகிய இரண்டு இதழ்களும் சுதேசி கருததுகளைப் பரப்புரை செய்வதில் முக்கிய பங்காற்றின.
3. தீவிர தேசியவாத தலைவர் பிபின் சந்திரபால் சென்னைமாகானத்தில் பயணம் மேற்கொண்டபோது ஆற்றிய சொற்பொழிவுகள் இளைஞர்களைக் கவர்ந்தன.
4. சுதேசியைத் செயல்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட துணிகரமான நடவடிக்கைகளில் ஒன்று யாதெனில் தூத்துக்குடியில் வ.உ. சிதம்பரனாரால் தொடங்கப்பட்ட சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் ஆகும்.

அ) அனைத்தும் சரி ஆ) 2 மட்டும் தவறு இ) 1 2 தவறு ஈ) 2, 4 தவறு

25. வ.உ.சி ஆல் வாங்கப்பட்ட இரு கப்பல்களின் பெயர்கள்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

அ) கலிலியோ , லாவோஸ் ஆ) காலியா, லாவோ இ) சுதேசி, டபிள்யூ.ஒ.சி ஈ) சுதேசி, காலியா

26. எந்த இரு நகரங்களுக்கிடையே வ.உ.சியால் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டது.

அ) சென்னை, கொழும்பு ஆ) கொழும்பு, தூத்துக்குடி இ)கண்டி, தூத்துக்குடி ஈ) கொழும்பு , விசாகப்பட்டினம்

27. வ,உ,சி ஐரோப்பியர்களுக்கு சொந்தமான கோரல் நூற்பாலையில் நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்கு தலைமை தாங்கிய வருடம்.

அ) 1908 ஆ)1909 இ) 1910 ஈ) 1911

28. யாருடைய விடுதலையை கொண்டாடுயதற்காக வ.உ.சி யும், சிவாவும் கைது செய்யப்பட்டனர்.

அ) பிபின் சந்திரபால் ஆ) அரவிந்தகோஷ் இ) திலகர் ஈ) பாரதியார்.

29. வ.உசி மற்றும் சிவாவின் கைதை தொடர்ந்து திருநெல்வேலியில் வெடித்த கலவரத்தில் சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை

அ) 7 ஆ) 3 இ)4 ஈ) 8

30. பாரதியார் தான் கைதாவதை தவிர்ப்பதற்காக இடம்பெயர்ந்த பகுதி

அ) திருச்சி ஆ) சேலம் இ) காரைக்கால் ஈ) பாண்டிச்சேரி

31. புரட்சிகர தேசியவாதிளுக்கு புகலிடமாக விளங்கிய இடம்.

அ) தமிழ்நாடு ஆ) பாண்டிச்சேரி இ) இந்தியா ஹவுஸ் ஈ) இலண்டன்

32. தமிழ்நாட்டை சேர்ந்த புரட்சிகர தேசியவாதிகள் பலருக்குப் புரட்சிகர நடவடிக்கைகள் குறித்த அறிமுகமும் பயிற்சியும்—————————மற்றும் ———————————இடங்களில் வழங்கப்பெற்றது.

அ) இலண்டன்,பாரிஸ் ஆ) பாண்டிச்சேரி, திருநெல்வேலி இ) பாரிஸ், ஜப்பான் ஈ) ஜப்பான், இலண்டன்

33. கீழ்கண்டவர்களில் பொருந்தாதவர்கள்

அ) எம்.பி.டி. ஆச்சார்யா, ஆ) வி.வி சுப்ரமனியனார் இ) டி.எஸ்.எஸ். ராஜன் ஈ) ஜி. சுப்பிரமணிய ஐயர்

34. இந்தியா, விஜயா, சூர்யோதயம் ஆகியன ———————————நகரிலிருந்து வெளியாயின

அ) சென்னை ஆ) திருச்சி இ) பாண்டிச்சேரி ஈ) காஞ்சிபுரம்

35. அரவிந்த் கோஷ், வி.வி. சுப்ரமணியனார் ஆகியோர் பாண்டிச்சேரிக்கு வருகைப்புரிந்த ஆண்டு.

அ) 1910 ஆ) 1909 இ) 1911 ஈ) 1912

36. பாரத மாதா சங்கத்தை தொடங்கியவர்

அ) சுப்பிரமணிய சிவா ஆ) பாரதியார் இ) நீலகண்ட பிரமச்சாரி ஈ) ஜி. சுப்பிரமணியம்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

37. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ராபார்ட் ஆஷ் என்பவரை மணியாச்சி ரயில் சந்திப்பில் சுட்டுக்கொன்ற வாஞ்சிநாதனின் சொந்த ஊர்

அ) திருவிதாங்கூர் ஆ) திருநெல்வேலி இ) செங்கோட்டை ஈ) வாஞ்சிநாதன்

38. பிரம்மஞான சபையின் தலைவர் யார்

அ) அன்னிபெசன்ட் ஆ) ஆல்காட் இ) அருந்ததிஜிண்டால் ஈ) அருண்டேல்

39. தன்னாட்சி இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1916 ஆ) 1917 இ) 1915 ஈ) 1918

40. தன்னாட்சி இயக்க செயல்திட்டத்தில் அன்னிபெசண் அம்மையாருக்கு துணை நின்றவர்கள்

அ) ஜி.எஸ். அருண்டேல் ஆ) பி.பி. வாடியா இ) சி.பி ராமசாமி ஈ) மேற்கண்ட மூவரும்

41. நியூ இந்தியா, காமன் வீல் என்ற பத்திரிக்கைகளை தொடங்கியவர்

அ) பாரதியார் ஆ) ஜி. சுப்பிரமணிய ஐயர் இ) அன்னிபெசன்ட் ஈ) காந்தி

42. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க

1. *அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது* – **காந்தியடிகள்**
2. 1910 ஆம் ஆண்டு பத்திரிகைக்ச சட்டத்தின்ப அன்னிபெசண்ட் பிணைத் தொகையாக பெருமளவு பணத்தை செலுத்தும்படி அறிவுறுத்தப்பட்டார்.
3. அன்னிபெசன்ட் *How India Wrought for Freedom., India- A Nation* என்னும் இரு புத்தகங்களை எழுதியுள்ளார்.
4. தன்னாட்சி இயக்கத்தில் உறுப்பினராக இருந்த பி.பி. வாடியா போன்றோர் தொழிற்சங்கங்களை உருவாக்கி தொழிலாளர் வர்க்கத்தை அணி திரட்டுவதில் முக்கியப் பங்காற்றினார்.

அ) அனைத்தும் சரி ஆ) 5 மட்டும் தவறு இ) 3 மட்டும தவறு ஈ) 1 மட்டும் தவறு

43. காங்கிரஸ் மாநாட்டிற்கு அன்னிபெசண்ட் தலைமை தாங்கிய ஆண்டு

அ) 1916 ஆ) 1918 இ) 1917 ஈ) 1919

44. சென்னை திராவிடர் கழகம் உருவாக்கப்பெற்ற ஆண்டு

அ) 1912 ஆ) 1913 இ) 1915 ஈ) 1914

45. சென்னை திராவிடர் கழகத்தின் செயலாளர்

அ) டி.எம் நாயர் ஆ) தியாகராயர் இ) சி. நடேசனார் ஈ) ஜி.சுப்பிரமணிய ஐயர்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

46. பிராமணர் அல்லாத மாணவர்களுக்காக ***திராவிடர் சங்க தங்கும் விடுதி*** யை சி. நடேசனார் நிறுவிய ஆண்டு.

அ) 1916 சூன் ஆ) 1916 சூலை இ) 1916 ஏப்ரல் ஈ) 1917 மே

47. பிரமணரல்லாதவர்கள் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தை தொடங்கிய ஆண்டு

அ) 1916 நவம்பர் 20 ஆ) 1916 சூலை 20 இ) 1916 அக் 20 ஈ) 1916 ஆக 160

48. தென்னிந்திய நலவுரிமை சங்கம் சார்பில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட பத்திரிக்கையின் பெயர்

அ) நீதி ஆ) ஆந்திர பிரகாசிகா இ) ஜஸ்டிஸ் ஈ) திராவிடன்

49. கீழ்கண்டவற்றுள் பொருந்தாதது.

1. அரசுப் பணியிடங்களில் பிராமனரல்லாதோர்களுக்கு இடஒதுக்கீடு மற்றும் பிரநித்துவ அமை ப்புகளில் இடஒதுக்கீடு என்பனவாகும்.
2. இவ்வமைப்பு தன்னாட்சி இயக்கத்தைப் பிராமணர்களின் இயக்கம் என எதிர்த்தது.
3. தன்னாட்சி இயக்கம் பிராமணர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கக் கூடுமென அஞ்சியது.
4. 1919 ஆம் ஆண்டுச் சட்டம் பிராமணரல்லாதோர்களுக்குத் தேர்தலில் இட ஒதுக்கீடு வழங்கியது.

அ) அனைத்தும் சரி ஆ) 4 ,2 தவறு இ) 1 4 தவறு ஈ) அனைத்தும் தவறு

50. 1920 இல் நடத்தப்பட்ட தேர்தலில் மொத்த இருந்த இடங்கள்-----------மற்றும் நீதிக்கட்சி வெற்றி பெற்ற இடங்கள்

அ) 98, 63 ஆ) 63, 98 இ) 48,84 ஈ) 56, 67

51. 1920 இல் வெற்றிபெற்ற நீதிக்கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் யார்.

அ) சுப்பராயலு ஆ) பனகல் இ) பி.டி தியாகராயர் ஈ) சுப்பிரமணியம்.

52. கீழ் கண்ட கூற்றுகளை ஆராய்க (நீதி கட்சியின் சாதனைகள்)

1. உள்ளாட்சி துறைகளிலும் கல்விநிலையங்களிலும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு செய்யப்பட்டது.
2. பணியாளர் தேர்வானையம் நிறுவப்பட்டது.
3. இந்து சமய அறநிலையத்துறை சட்டமும் சென்னை அரசு தொழில் உதவிச் ட்டமும இயற்றப்பட்டன. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.
4. கல்வி உதவிதொகை, ஏழை எளிய மக்கள் வீடு கட்டிக் கொள்வதற்காகப் புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து வழங்கப்பட்டன. மதிய உணவு திட்டம் செயல்படுத்தியது.

அ) அனைத்தும் சரி ஆ) அனைத்தும் தவறு இ) 1,3,4 சரி ஈ) 4 மட்டும தவறு

53. ரௌலட் சட்டத்தை எதிர்த்து காந்தியடிகள் மெரினா கடற்கரையில் உரையாற்றிய ஆண்டு.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

அ) 1919 மார்ச் 18 ஆ) 1919 மார்ச் 19 இ) 1919 மார்ச் 20 ஈ) 1919 மார்ச் 22

54. ரௌலட் சட்டத்தை எதிர்க்கும் நோக்கில் (கருப்புச் சட்டம்) கடையடைப்பு நடைபெற்ற நாள்

அ) 1919 மார்ச் 18 ஆ) 1919 ஏப்ரல் 6 இ) 1919 ஏப்ரல் 8 ஈ) 1919 ஏப்ரல் 9

55. மதுரையில் தன்னாட்சி இயக்கத்தை தொடங்கியவர்

அ) சுப்பிரமணிய சிவா ஆ) தியாகராயர் இ) பாரதியார் ஈ) ஜார்ஜ் ஜோசப்

56. **ரோசாப்பூ துரை** என்று அழைக்கப்பட்டவர்

அ) சுப்பிரமணிய சிவா ஆ) தியாகராயர் இ) பாரதியார் ஈ) ஜார்ஜ் ஜோசப்

57. மதுரை தொழிலாளர் சங்கம் தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1919 ஆ) 1918 இ) 1920 ஈ) 1921

58. ***சென்னை சத்தியாகிரக சபை*** எந்த போராட்டத்தின்போது நிறுவப்பட்டது.

அ) வெள்ளையனே வெளியேறு ஆ) ஜாலியன் வாலபாக் படுகொலை

இ) மிண்டோ மார்லி சட்டம் ஈ) ரௌலட் சட்டம்

59. ரௌலட் சத்தியா கிரகத்தின் போது தொழிலாளர்களுக்கென தனியாக நடத்தப்பட்ட கூட்டமொன்றில் உரையாற்றதவர்

அ) வி. கல்யாண சுந்தரம் ஆ)பி.பி வாடியா இ) வ.உ.சி. ஈ) சத்தியமூர்த்தி

60. மௌலான சௌகத் அலியால் தமிழ்நாட்டில் கிலாபத் நாள் எப்போது கடைபிடிக்கப்பட்டது.

அ)1920 ஏப்ரல் 16 ஆ) 1920 ஏப்ரல் 18 இ) 1920 ஏப்ரல் 17 ஈ) 1920 சூன் 17

61. ஒத்துழையாமை இயக்கத்திற்கு தமிழகத்தில் தலைமை தாங்கியவர்கள்

1. சி. ராஜாஜி 2. ஈவெ.ரா . 3. சி. சத்தியமூர்த்தி 4. யாகுப் ஹசன்

அ) அனைத்தும் சரி ஆ) 1, 3, 2 மட்டும் சரி இ) 1 மட்டும் தவறு ஈ) 3, 4 தவறு

62. முஸ்லீம் லீக்கின் சென்னை கிளையை நிறுவியவர் யார்.

அ) சௌகத் அலி ஆ) லியாகத் அலிகான் இ) யாகுப் ஹசன் ஈ) ரகமத் அலி

63. தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கிய அம்சமாக திகழ்ந்தது.

அ) கல்லூரிகள் புறக்கணிப்பு ஆ) கள்ளுக்கடைகள் மறியல்

இ) தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஈ) கடையடைப்புகள்

64. தமிழ்நாட்டில் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கப்பட்ட ஆண்டு

அ) 1921 டிசம்பர் ஆ) 1921 நவம்பர் இ) 1922 அக் ஈ) 1922 சனவரி



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

65. வேல்ஸ் இளவரசரின் வருகை நிகழ்ந்த ஆண்டு

அ) 1922 சனவரி 13 ஆ) 1922 சனவரி 14 இ) 1922 சனவரி 15 ஈ) 1922 சனவரி 17

66. தமிழ்நாட்டில் கதரின் பயன்பாட்டை மேம்படுத்தி அதன் விற்பனையை அதிகரிக்கத் தீவிரமாகச் செயல்பட்டவர்

அ) காந்திஜி ஆ) மூவாலூர் இராமமிர்தம் இ) காமராஜர் ஈ) .ஈ.வெ.ரா

67. வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக பொரியாருக்கு முதன் முதலில் வழங்கப்பட்ட தண்டனை

அ) 6 மாதம் ஆ) 1 மாதம் இ) 1 வருடம் ஈ) 8 மாதம்

68. வைக்கம் வீதிகளில் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்ட நாள்

அ) 1925சூன் ஆ) 1925 மே இ) 1925 சூலை ஈ) 1925 செப்டம்பர்

69. பெரியார் காங்கிரஸ் மீது அதிருப்தி அடைய காரணம்.

1. பிராமணர்களின் நலன்களை மட்டுமே மேம்படுத்துவதாக உணர்ந்தார்.
2. சேரன்மாதேவி குருகுலப் பிரச்சனை
3. வருப்புவாரி பிரதிநித்துவம் தொடர்பாக காங்கிரசுக்ளே ஏற்பட்ட கருத்து வேறுபாடு

அ) அனைத்தும் சரி ஆ) 2 3 மட்டும் சரி இ) 3 மட்டும் சரி ஈ) 1 மட்டும் சரி

70. சேரான்மாதேவியில் குருகுலப் பள்ளியினை நிறுவியவர்

அ) பாரதியார் ஆ) சுப்பிரமணிய சிவா இ) வி.வி சுப்பிரமணியம் ஈ) வரதராஜிலு

71. சேரான்மாதேவி குருகுலப் பள்ளி விவகாரத்தில் யாருடன் சேர்ந்து பெரியார் போராடினார்.

அ) பாரதியார் ஆ) சுப்பிரமணிய சிவா இ) வி.வி சுப்பிரமணியம் ஈ) வரதராஜிலு

72. பிராமணரல்லாதோருக்கு சட்டபையில் பிரதிநிதித்துவம் வேண்டி எந்த மாநாட்டில் கோரிக்கை வைத்தார்.

அ) 1924 நவம்பர் 21 காஞ்சிபுரம் ஆ) 1925 நவம்பர் 21 காஞ்சிபுரம்

இ) 1925 நவம்பர் 21 சென்னை ஈ) 1925 நவம்பர் 21 சென்னை

73. தமிழ்நாட்டில் சுயராஜ்ஜிய கட்சிக்கு தலைமை யேற்றவர்கள்

அ) எஸ். சீனிவாசனார், ஆ) சத்தியமூர்த்தி இ) அ மட்டும் ஈ) ஆ மற்றும் அ

74. கீழ்கண்டவர்களில் பொருந்தாதது

அ) கஸ்துாரி ரங்கள்ா ஆ) எம். ஏ. அன்சாரி இ) இராஜாஜி ஈ) சத்தியமூர்த்தி

75. 1926 இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற கட்சி

அ) காங்கிரஸ் ஆ) நீதிக்கட்சி இ) சுயராஜ்ஜிய கட்சி ஈ) உழவர் கட்சி



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.Com

76. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க

1. 1926 ஆம் ஆண்டில் பி. சுப்ராயன் தலைமையில் ஆட்சி அமைக்கப்பட்டது.
2. 1930 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி போட்டியிடாததால் சுயராஜ்ஜியக் கட்சி எளிதில் வெற்றி பெற்றது
3. நீதிக்கட்சியின் ஆட்சி 1938 வரை நீடித்தது.

அ) அனைத்தும சரி ஆ) 3 மட்டும் தவறு இ) 1 மட்டும் தவறு ஈ) 2 மற்றும் 3 தவறு

77. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க

1. 1917 மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களை ஆராய 1927 சைமன் குழு அமைக்கப்ட்டது.
2. தமிழ்நாட்டில் சைமன் குழு எதிர்ப்பு போராட்டத்திற்கு இராஜாஜி தலைமை தாங்கினார்
3. 1927 பிப்ரவரி 18 இல் சைமன் குழு சென்னை வந்தது.

அ) அனைத்தும் சரி ஆ) 3 மட்டும் தவறு இ) 1 ,2 மட்டும் தவறு ஈ) அனைத்தும் தவறு

78. -------இல் இந்தியா தேசிய காங்கிரசின் சென்னை மாநாடு முழுமையான சுதந்திரமே தனது இலக்கு என அறிவித்தது.

அ) 1927 ஆ) 1928 இ) 1929 ஈ) 1930

79. சைமன் குழுவினை எதிர்த்து, அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களை வடிவமைப்பதற்காக காங்கிரஸ் யார் தலைமையில் குழு ஒன்றை அமைத்தது–

அ) ஜவஹர்லால் நேரு ஆ) மோதிலால் நேரு இ) காந்தியடிகள் ஈ) இராஜேந்திர பிரசாத்

80. 1920 சனவரி 26 இல் ராவி நதியின் கரையில் சுதந்திரத்தை அறிவிக்கும் விதமாக தேசியக் கொடியை ஏற்றியவர்

அ) ஜவஹர்லால் நேரு ஆ) மோதிலால் நேரு இ) காந்தியடிகள் ஈ) இராஜேந்திர பிரசாத்

81. இராஜாஜி தலைமையில் நடத்தப்பட்ட வேதராண்யம் உப்பு சத்தியாகிரம் தொடங்கப்பட்ட நாள்

அ) 1930 ஏப்ரல் 28 ஆ) 1930 ஏப்ரல் 13 இ) 1930 ஏப்ரல் 14 ஈ) 1930 ஏப்ரல் 18

82. இராஜாஜி தலைமையில் நடத்தப்பட்ட வேதராண்யம் உப்பு சத்தியாகிரம் நிறைவுற்ற நாள்

அ) 1930 ஏப்ரல் 28 ஆ) 1930 ஏப்ரல் 13 இ) 1930 ஏப்ரல் 14 ஈ) 1930 ஏப்ரல் 18

83. ***கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுத, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்*** எனும் சிறப்புப்பாடலை இயற்றியவர்

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) நாமக்கல் கவிஞர் ஈ) வரதராஜன்

84. ராஜாஜி தலைமையில் எத்தனை தொண்டர்கள் உப்புச் சட்டத்தை மீறி உப்பை அள்ளினார்.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

அ) 17 ஆ) 72 இ) 22 ஈ) 12

85. உப்பு சத்தியாகிரகத்தின்போது திருவல்லிகேணியில் காவல்துறையினருடன் மோதல் ஏற்பட்ட நாள்

அ) 1930 ஏப்ரல் 27 ஆ) 1930 ஏப்ரல் 28 இ) 1930 ஏப்ரல் 29 ஈ) 1930 ஏப்ரல் 30

86. உப்புச் சட்டங்களை மீறியதாக அபராதம் கட்டிய முதல் பெண்மணி

'அ) தருமாம்பாள் ஆ) அருந்தததி ஜிண்டேல் இ) ருக்மணி லம்சுதிபதியாவார் ஈ) அஞ்சலையம்மாள்

87. ஆர்யா என அழைக்கப்ட்ட பாஷ்யம் புனித ஜார்ஜ் கோட்டையில் உச்சியில் தேசியக்கொடியை ஏற்றிய நாள்

அ) 1932 சனவரி 27 ஆ) 1932 சனவரி 28 இ) 1932 சனவரி 29 ஈ) 1932 சனவரி 26

88. ஒ.கே.எஸ்.ஆர். குமாரசாமி கொடிகாத்த குமாரானாக மாறிய நாள்

அ) 1932 சனவரி 11 ஆ) 1932 சனவரி 22 இ) 1932 சனவரி 29 ஈ) 1932 சனவரி 26

89. தமிழ்நாட்டில் மிகப்பெரிய மக்கள் இயக்கங்களுள் ஒன்று

அ) வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆ) உப்பு சத்தியாகிரகம்

இ) ஒத்துழையாமை இயக்கம் இ) தனிநபர் சத்தியாகிரம்

90. 1937 இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற கட்சி

அ) நீதிக்கட்சி ஆ) காங்கிரஸ் கட்சி இ) சுயராஜ்ஜியக் கட்சி ஈ) பார்வோர்டு பிளாக் கட்சி

91. முதல் காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்த இராஜாஜி எங்கு மது விலக்கை அறிமுகப்டுத்தினார்.

அ) சென்னை ஆ) காஞ்சிபுரம் இ) திருச்சி ஈ) சேலம்

92. ஜமீன்தார்களின் பகுதிகளைச் சேர்ந்த குத்தகைதாரர்களின் நிலை குறித்து விசாரணை செய்ய விசாரணை குழு யாருடை முயற்சியினால் அமைக்கப்பட்டது.

அ) இராஜாஜி ஆ) டி. பிரகாசம் இ) சத்தியமூர்த்தி ஈ) பெரியார்

93. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க

1. மதுரை ஹரிஜன சேவக் சங்கத்தின் தலைவர் வைத்தியநாதர், செயலர். எல்.என் கோபால்சாமி
2. மதுரை ஹரிஜன சேவக் சங்கத்தால் 1938 சூலை 9 இல் மதுரை மீனாட்சி யம்மன் கோவிலுக்குள் ஹரிஜன மக்களுடன் நுழையத் திட்டமிடப்பட்டது.
3. 1939 இல் கோவில் நுழைவு அங்கீகார , இழப்பீட்டுச் சட்டம் இயற்றப்பட்டது.
4. இரண்டாம் உலகப்போரில் இந்தியர்களை ஈடுபடுத்தியதற்காக எதிர்ப்பு தெரிவித்து 1939 காங்கிரஸ் ராஜிநாமா செய்தது.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

அ) அனைத்தும் சரி ஆ) 3 4 தவறு இ) 1 மட்டும் தவறு ஈ) 2 மட்டும் தவறு

94. கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க

1. இராஜாஜியால் பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயப்பாடமாக அறிமுகம் செய்யப்பட்டது.
2. இதற்கு எதிராக பெரியார் மிகப்பெரிய பரப்புரையை மேற்கொண்டார்.
3. அவர் இந்தி எதிர்ப்பு மாநாட்டை காஞ்சிபுரத்தில் நடத்தினார்.
4. தாளமுத்து மற்றும் நடராஜன் எனும் இரண்டு ஆர்வமிக்க போராட்டக்காரர்கள் சிறையில் மரணமடைந்தனர்.
5. சேலத்திலிருந்து சென்னைக்கு ஊர்வலமொன்று திட்டமிடப்பட்டது.

அ) அனைத்தும் சரி ஆ) 1, 3, 4 தவறு இ) 3 5 தவறு ஈ) 5 மட்டும் தவறு

95. பம்பாயிலிருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்த கு.காமராஜ் காவல்துறையினரின் கண்களில் படாமல் இரயிலை விட்டு இறங்கிய இடம்.

அ) சேலம் ஆ) திருச்சி இ) காஞ்சிபுரம் ஈ) அரக்கோணம்

வரலாறு பாடப்பகுதியில் இதற்கு முந்தைய 09 தேர்வுகளின் விடை மற்றும் வினாவை பதிவிறக்கம் செய்ய இங்கே கிளிக் செய்யவும்.

CLICK NOW

https://www.youtube.com/channel/UCDGWaB8xP3xjL46ay-3l0tA?view_as=subscriber

PLEASE SUBSCRIBE AND GET MATERIALS, QUESTION PAPER PDF

( இவ்வினாக்ளுக்கான விடைகள் அனைத்தும் Periyar Payirchi Pattarai You Tube channel இல் பதிவிடப்படும். மேலும் Description Box இல் இவ்வினாத்தாள் மற்றும் விடையுடன் கூடிய பிரதியை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் )